# 39வது நினைவுப் பேருரை

**புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் உள்ளத்தில் நல்லது அதில் உள்ளதும் நல்லதும் சமூக கலை பண்பாட்டு அரசியல் பார்வையும் அதனுடனான இன்றைய சூழ்நிலையும் அவர் மொழியில் அவர் அணுகுமுறையில் ஓர் உசாவுகை.**




கலாநிதி.எம்.பி.ரவிச்சந்திரா

கல்வியலாளர் (SLTES)

அரசினர் ஆசிரியர் கலாசாலை

மட்டக்களப்பு



புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை

நினைவுப் பணிமன்றம்

மட்டக்களப்பு.

2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 39வது நினைவுப் பேருரை

## புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் உள்ளத்தில் நல்லது அதில் உள்ளதும் நல்லதும் சமூக கலை பண்பாட்டு அரசியல் பார்வையும் அதனுடனான இன்றைய சூழ்நிலையும் அவர் மொழியில் அவர் அணுகுமுறையில் ஓர் உசாவுகை.


கலாநிதி. எம். பி. ரவிச்சந்திரா

கல்வியலாளர் (SLTES)

அரசினர் ஆசிரியர் கலாசாலை

மட்டக்களப்பு



புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை

நினைவுப் பணிமன்றம்

மட்டக்களப்பு.

2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலக்கிய கலாநிதி புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையின்
# 39 வது நினைவுதின நிகழ்வு

இடம் :- மட்/பட்/செட்டிபாளையம் மகா வித்தியாலயம்
காலம் :- 05.11.12.2017 ஞாயிற்றுக்கிழமை
காலை :- 9.30 மணி

**<u>தலைமை</u>**

கலாநிதி.சி.சந்திரசேகரம்

தலைவர்,புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை

நினைவுப் பணிமன்றம்

நினைவுப் பேருரை

கலாநிதி.M.P.ரவிச்சந்திரா

கல்வியலாளர் (SLTES)

அரசினர் ஆசிரியர் கலாசாலை, மட்டக்களப்பு

**<u>பிரதம அதிதி</u>**

திரு.S.மனோகரன்

மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர்

**<u>சிறப்பு அதிதி</u>**

திரு.R.சுகிர்தராஜ்

வலயக் கல்விப் பணிப்பாளர்

**<u>கௌரவ அதிதிகள்</u>**

திரு.க.குணசேகரம் (உதவிக் கல்விப் பணிப்பாளர்)

கலாபூசணம் மா.திருநாவுக்கரசு

திரு ஞா.புவனசுந்தரம் (ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்)

திரு இ.கோபாலப்பிள்ளை ( ஓய்வு பெற்ற அதிபர்)

திரு.S.மதிசுதன் (அதிபர்)

திரு.ப.குணசேகரம் (திருஞான சம்பந்தர் குருகுலத் தலைவர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## நிகழ்வுகள்

* மங்கல விளக்கேற்றல்
* புலவர்மணி உருவப்படத்திற்கு மாலை அணிவித்தல்
* இறைவணக்கம்
* வரவேற்புரை
* திரு.த.அருள்ராஜா
  (அதிபர், மட்/பட்/செட்டிபாளையம் மகா வித்தியாலயம்)
* தலைமையுரை
* நினைவுப் பேருரை
* பிரதம அதிதியுரை
* சிறப்பு அதிதியுரை
* பாடசாலை மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கி வைத்தல்
* நன்றியுரை
* திரு.பெ.சத்தியலிங்கம்
* செயலாளர், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை
* நினைவுப் பணிமன்றம்

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை
நினைவுப் பணிமன்றம்
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் உள்ளத்தில் நல்லது அதில் உள்ளதும் நல்லதும் சமூக கலை பண்பாட்டு அரசியல் பார்வையும் அதனுடனான இன்றைய சூழ்நிலையும் அவர் மொழியில் அவர் அணுகுமுறையில் ஓர் உசாவுகை.**

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளை அறிந்து கொள்ளவும் அதுபோல் அவர் காலத்து அரசியல் சமூக கலை பண்பாட்டு சமூக அடித்தளத்தை அறிந்து கொள்ளவும் இந்நூல் ஆதாரசுருதியாய் உள்ளது. எனவே புலவர்மணியினது “உள்ளதும் நல்லதும்” நூலினை ஆதாரமாகக் கொண்டு அக்காலகட்ட அரசியல் சமூக கலை பண்பாட்டு சூழ்நிலைகளில் இருந்து இன்று நாம் நிற்கின்ற தற்கால சூழ்நிலையின் அடித்தளத்தை பதிவு செய்தல் என்பது சமூக பண்பாட்டு மாற்றத்தில் எமது வாழ்வியலின் தேவைதனை ஒருபுறம் உரசிப்பார்ப்பதும் மறுபுறம் எமது பாரம்பரியத்தின் தேய்தலையும் வளர்தலையும் ஒரு நாயணத்தின் இருபக்கம் போல் ஆராய்ந்து பார்ப்பதும் மாற்றமுறும் சமூகத்தின் மாற்றத்தின் அடி நாதத்தை புடம் போட்டுப் பார்ப்பதும் இன்று காலத்தின் கட்டாயத் தேவை.

அந்த வகையில் தேடல் என்பது தேய்தலா அல்லது வளர்தலா என்பதற்கு அப்பால் எமது இருப்புக்கள் மீதான பலத்தை அல்லது பலவீனத்தை அது ஏதோ ஒரு வகையில் உறுதிப்படுத்துவதாய் அமைதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

புலவர்மணியினது 79 ஆண்டுகால வாழ்நாள் காலத்தில் 60 ஆண்டுகள் பல்வேறு சமய, பண்பாட்டு, அரசியல் இயக்கங்களில் உணர்வோடு உழைத்தவர். அந்த உழைப்புக்களை அவர்கள் முழுமையாக எழுத்துலகில் பதிவு செய்யாவிட்டாலும் தன் வாழ்நாள் அனுபவக்குறிப்பாக சிந்தாமணி ஞாயிறு வார இதழில் உள்ளதும் நல்லதும் என்ற கட்டுரை வடிவாக எழுதியதன் மூலம் தீர்த்து வைத்துள்ளார். இவ்விதழில் அவர் எழுதிய 50 கட்டுரைகள் உள்ளதும் நல்லதும் நூலாக தொகுக்கப்பட்டுள்ளது.

இந்நூல் மூலம், அவரது உரைநடைத்திறன் பற்றி அறிந்து கொள்ளவும் அவரது வாழ்க்கை வரலாற்றை புரிந்து கொள்ளவும் அதன் பின்புலத்தில் மட்டக்களப்பு சமூக வரலாற்றைத் தெரிந்து கொள்ளவும் இது அடித்தளமாக அமைந்துள்ளது. இதன் மூலம் புலவர்மணி காலத்து அரசியல், சமய, பண்பாட்டு, சமூக சூழ்நிலையும் அதனோடு புலவருக்கு இருந்த இணையறாத் தொடர்பையும் அறிந்து கொள்ள முடிகிறது. இந்த ஊடாட்டம் மட்டக்களப்பு சமூக இருப்பையும் அதன் அடித்தளத்தையும், இணையறாப்பிணைப்பையும் வெளியுலகிற்கு தெளிவுபடுத்தும் திறவு கோலாக அமைந்துள்ளது எனலாம்.

இலக்கியக் கலாநிதி புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் மரபுவழித்தமிழ்ப் புலவராயினும் உயர்ந்தோர் குழாம் ஒன்றினால் ஏலவே அங்கீகரிக்கப்பட்ட கருத்துக்களுக்குள்ளும், சமய விடயங்களுக்குள்ளும், யாப்பு விதிகளுக்குள்ளும், கடைசிவரை கட்டுண்டு கிடந்தவர் அல்லர். கால மாற்றத்தினதும், சமூக மாற்றத்தினதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

போக்குக்குக்கு இசைந்து தன்னைச் சூழ உள்ள சமூகப் பிரச்சினைகளிலும், பொது மக்கள் விளங்கக்கூடிய எளிய மொழி நடையிலும் புலவர் கவனம் செலுத்தினார்.

இன, மத, சாதி, சமய, பிரதேச வேறுபாடுகளைக்கடந்து மனித நேயத்தோடு செயற்பட்ட ஒருவர். சமூகத்தின் அடி மட்டத்திலிருந்து மக்களுடைய வாழ்க்கை விழுமியங்களையும், கலைத்துறைதனையும் புரிந்து கொண்டு செயற்பட்டவர். மனித சுதந்திர, சமத்துவ, சகோதரத்துவ உணர்வுகளுக்கு கட்டுப்பட்டு துலங்கிய புலவர்மணி அவர்கள் உலகின் பன்முகத்தன்மையை விளங்கிக் கொண்டவராவார். வேற்றுமையில் ஒற்றுமை காணும் மனிதராய் அவர் விளங்கினார்.

கவிதை, கட்டுரை, சொற்பொழிவு, இதழியல் முதலான பல்வேறு துறைகளிலும் உழைத்த புலவர்மணி சமூக சீர்திருத்த அரசியல் இயக்கங்களிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். அவரது ஆளுமை, சமரச நோக்கு, கலை உணர்வு, முற்போக்குச்சிந்தனை முதலானவற்றையும் அவரது பல்துறைப்பணிகளையும் தொடர்புகளையும் அறிந்து கொள்ள இன்நூல் வாய்ப்பாக உள்ளது எனலாம்.

விபுலாநந்த அடிகளாரின் மாணவர்களாகிய போராசிரியர் க.கணபதிப்பிள்ளை, பேராசிரியர் சு.வித்தியானந்தன், ஏ.பெரியதம்பிப்பிள்ளை, வித்துவான் எவ்.எக்ஸ்.சி.நடராஜா, பண்டிதர் வித்துவான் வி.சி.கந்தையா, வித்துவான் சரவணமுத்து என்போர் குறிப்பிடத்தககவர்கள்.

மட்டக்களப்பு தந்த மனிதருள் மாணிக்கமான புலவர்மணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அவர்கள், 1899ம் ஆண்டு தைத்திங்கள் 8ஆம்திகதி மண்டூரில் பிறந்தார். புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் 60 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ், சமய, கல்விப்பணிகள் புரிந்து இலங்கைத்திருநாட்டில் தமிழ் வளரத்த பெரியார் வரிசையில் ஒரு நிலையான இடத்தைப் பிடித்துள்ளார். புலவர்மணி அவர்கள் எமக்கு 17க்கு மேற்பட்ட நூல்களைத் தந்துள்ளார். பகவத்கீதை, வெண்பா, கருமயோகம், பக்தி யோகம், ஞானயோகம், புலவர்மணி கவிதைகள், உள்ளதும் நல்லதும், பாலைக்கலி, புலவர்மணி கட்டுரைகள், விபுலாநந்தர் மீட்சிப் பத்து, என்பவை இவற்றில் குறிப்பித்தக்கவை.

இவரது நூல்களுக்கு. விபுலாநந்த அடிகள், பண்டிதமணி கணபதிப்பிள்ளை, பேராசிரியர் சு.வித்திநயானந்தன், முன்னாள் ஓய்வு பெற்ற நீதியரசர் வீரபாகு சுப்பிரமணியம், ஆத்மஜோதி ஆசிரியர் நா.முத்தையா, இந்து சமயப் பெரியார் இல்லற ஞானி உயர்திரு க.இராமச்சந்திரா, சேர்.பி.இராமநாத வள்ளலாரின் மருகர் கலாநிதி சு.நடேசப்பிள்ளை. கொழும்பு இராமகிருஷ்ண மடத்தின் தலைவர் ஸ்ரீமத் பிரேமானந்தாஜீ, இலக்கிய கலாநிதி பண்டிதர் வீ.சீ.கந்தையா, மகாவித்துவான் இலக்கிய கலாநிதி எவ்.எக்ஸ்.சி.நடராஜா முதலியோர் வழங்கியுள்ள ஆராய்ச்சி முன்னுரை, மதிப்புரை, அணிந்துரைகள் மூலம் தமிழ் மொழிக்கும், சைவத்திற்கும், சமூகத்திற்கும், புலவர்மணி ஆற்றிய அளவிடங்கரிய பணிகளை அறிய முடியும்.

புலவர்மணியின் உள்ளதும் நல்லதும் அவரது நூலிலே முதன்மையானது. மிக முக்கியமாக சுயசரிதையை எழுதுபவர்களுக்கு ஒரு எடுகோளாக இந் நூல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

விளங்குகின்றது. இந்நூல் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்து புலவர்மணி இயற்கை எய்தும் காலம் வரையான (1978.11.02) தகவல்கள் அறிய வாய்ப்புள்ளது. குறிப்பாக மட்டக்களப்பிலும் யாழ்ப்பாணத்திலும் நிலவிய சமூக சமய நிலைமைகளையும் இலங்கையின் அரசியற் போக்குகளையும் தனது அனுபவத்தின் வழியே பதிவு செய்துள்ளார்.

கலாநிதி சி.சந்திரசேகரம் குறிப்பிடுவது போல் புலவர்மணியைப்பற்றி நாம் புரிந்துகொள்ளவும் அறிந்து கொள்ளவும் இந்நூல் ஆதாரமாக அமைகிறது. இந்த வரலாற்றைப் புலவர்மணி எழுதவில்லையெனின் அவரைப்பற்றிப் பல்வேறு அடிப்படையான தகவல்கள் மட்டுமன்றி அவரது பலவித கவிதைகளும் இல்லாமல் போயிருக்கும் இவற்றிற்கு மேலாக அவரது படைப்புக்களை ஆராய்வதற்கான பின்புலத்தையும் இந்நூலே தருகிறது.

நவீன கவிதையினையும், பாரம்பரியக் கல்வியினையும் ஒரு சேரக்கற்றுக் கொண்டு பாரம்பரியத்திற்கும் நவீனத்திற்கும் இடையிலான பாலமாக, முற்போக்குச் சிந்தனையாளனாக அவர் மேற்கிளம்பினார். புலவர்மணியின் முற்போக்குச்சிந்தனைகளை அவரது கவிதைகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. ஆனால் அவர் நடைமுறை வாழ்விலும் எவ்வாறு முற்போக்காளனாக இயங்கினார் என்பததை "எமது உடம்பு பத்தொன்பதாம் நூற்றாண்டின் பழம் பெட்டி" என்ற கட்டுரை அழகாகப் படம் பிடித்துக்காட்டுகின்றது. உரைநடை எடுத்துரைப்பு முறைமை அவரது செந்நெறிப் புலமையை வெளிக்காட்டி நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"உள்ளதும் நல்லதும்", உள்ளததைச்சொன்னால் உடம்பெல்லாம் புண்ணா? என்று உலக வழக்கிலே கேட்பார்கள். எனது எழுதுகோல் எவர் ஒருவரின் உடம்பையோ உள்ளத்தையோ புண்படுத்தாது. நல்லதை எழுதுகிறேன். நல்ல நோக்கத்துடன் எழுதுகிறேன். நல்ல பாணியில் எழுகிறேன், நிதானமாக எழுதுகிறேன் நான் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்னை எதிர்நோக்கும் பிரச்சினைகள் என எத்தனையோ பிரச்சினைகள், ஆனால் நான் பிரச்சினைகளை உண்டாக்குபவனுமல்ல, பிரச்சினைகளுக்குரிய பேர்வழியுமல்ல, திடபுத்தியை வளர்த்துக் கொள்ளுங்கள், சம நோக்கில் நிலைத்து நில்லுங்கள் பிரச்சினைகளுக்கு இலேசாகத் தீர்வு காணலாம். வாழ்வு வளம்பெறும், சிக்கலான எனது வாழ்க்கைப்பாதையிலே நம்பிக்கை, நன்றி என்னும் இரு கால்களால் நான் நிதானமாக நடந்து கொண்டிருக்கிறேன். உள்ளதை எழுதிவையாமல் விடுவதும், பிறரறியாமல் மறைத்து வைப்பதும் அது நமது பரம்பரைப்பழக்கமல்ல. அது இடையில் வந்து புகுந்து கொண்ட புதுப்பழக்கம். இந்த உதவாத பழக்கம் நமது சந்ததியிலும் இனிவரும். இனிமேலும் இடம்பெறப்படாது. இடம்பெறவும் மாட்டாது. எனச்சொல்லுகின்ற புதுமை எழுத்தாளனின் எழுதுகோல் புலவர்மணியின் எழுதுகோல்.

இன்று மட்டக்களப்பு சமூகம் புலவர்மணி காட்டிய வழியில் நின்று மாறிநிற்கின்றது. வந்தாரை வாழவைத்த, வாழ்த்தி நின்ற சமூகம் அதன் இருப்புக்களை இன்று காப்பாற்றிக் கொள்ளவில்லை. தனக்கென வாழும் சுயநல வாழ்க்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

முறைமையை தன்னகத்தே வளர்த்துக் கொண்டு செல்கிறது. அந்த முரண்பாடுகளின் உச்ச வடிவங்களை இன்று சமூக வாழ்வின் சாதாரண அற்ப விடயங்களில்கூட நாம் அனுபவித்துக்கொண்டிருக்கிறோம்.

"பால் பெருகும்; தேன்பெருகும்; பண்புடைய மன்னவர் சொல்

கோல் பெருகும்படி வயற்பைங்கூழ் பெருகும்; புனல் பரந்து

கால் பெருகும்; கல்லார்க்கும் சொல்லாட்சி மிகப்பெருகும்;

நூல பெருகும் இடையர்க்கு நூவலறங்கள் பெருகுமால்"

என்ற பாடல் மூலம் மட்டக்களப்பு பற்றி கூறுகிறார். இன்று காலம் மாறிவிட்டது. நிலைமை வேறு எனது இந்தப்பாட்டைப் படிப்பவர்கள் இதை வெறும் புனைந்துரை என்றுதான் சொல்லவேண்டி இருக்கும் என்கிறார் புலவர்மணி. அது உண்மையானதீர்க்கதரிசனமாயிற்று.

இன்று நாம் காணும் மட்டக்களப்பு பண்பாட்டுவரட்சியும் இலக்கிய வரட்சியும் நோக்கு நகர்கிறது. நவீன தொழில்நுட்ப அலையுள் அடிபட்டு தொலைபேசிகளுக்குள் தொலைந்து போய்க் கொண்டிருக்கிறது. செல்பியும், பேஸ் புக்கும் எமது பண்புகளை பண்பாடாய் பறைசாற்றும் காலம் வெகு தூரத்தில் இல்லை. எனவே புலவர் காட்டிய வழிநின்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மட்டக்களப்பு மண் எதிர்நோக்கும் பண்பாட்டு அனர்த்தத்தில் இருந்து அதனைப்பாதுகாக்க வேண்டியது நம் அனைவரதும் கடமையாகும்.

சமூக வாழ்விலும், சமய வாழ்விலும் முறையால் சிவபக்தியும், கிருஷ்ண பக்தியும், கண்ணகி வணக்கமும், திரௌபதி வழிபாடும் இந்த சாட்டு மக்களிடையே சமமாகப்பிரபலம் பெற்று விளங்குகின்றன.

கண்ணகி வணக்கத்தின் வாயிலாக வழக்குரை காதையும், திரௌபதி வழிபாட்டின் வாயிலாக வில்லிபுத்தூர் பாரதமும், இங்கு நிலை கொண்டுள்ளன. பாரதம் தெரியாத ஒருவரை மட்டக்களப்பில் தமிழ் படித்தவராக கொள்ள மாட்டார்கள். மட்டக்களப்பு கலாசாரத்தோடு பாரதம் அவ்வாறு கலந்திருந்தது. ஆதலால்தான் வசந்தகாலத்தில் ஆலயங்களில் நிகழ்த்தப்படும் கலை நிகழ்வுகளில் கண்ணகி, பாரதம், திரௌபதி கதைகள் கூத்துக்களாகவும், வில்லுப்பாடல்களாகவும், தாளலயங்களாகவும், நாட்டிய நாடகங்களாகவும் அரங்கேறின. இந்தப் பண்பாட்டு நிலைமைகள் மிக அருகிவிட்டன. 1950களில் கூத்துக்கலை பற்றி இராம நாடகத்திற்கு எழுதிய அணிந்துரையில் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

“இன்று நாட்டுக்கூத்துக்கள் பெரும்பாலும் கல்வி அறிவு இல்லாதவர்களின் கையிலே பிழைப்புக்காக கூத்தாடுபவர்களின் கையிலே அகப்பட்டு இன்னும் தரம்குறைந்து போனதைக்காண மனம் மிகவும் வருந்துகின்றது. இயற்தமிழானது இசை, நாடக கலைகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உடம்பு போன்றது. இதனால் இசையாசிரியர்களும், நாடகக்கலைஞர்களும், இயற்றமிழில் அறிவு பெற்றாலொழிய இசை நாடகக்கலைகளை திருந்திய நெறியில் வளர்த்தல் முடியாது.

இன்று நடைமுறையில் இருக்கும் நாடக ஏட்டுப்பிரதிகளே இதற்குச் சான்றுபகர்கின்றன. ஆயிரமாயிரம் எழுத்தப்பிழைகள், பாட்டுக்களில் அடித்தலை தடுமாற்றங்களுக்கோ அளவில்லை. இசையறியாமல் எதுவதால் ஒரு அடியின் வால் இன்னொரு அடியின் தலைக்குள் நுழைந்துவிடுகிறது. இன்னொரு அடியின் தலை மற்றொரு அடியின் வாலுடன் பிணைந்து விடுகிறது. ஆனால் இன்று பெரும்பாலான அண்ணாவிமாரும் நாடக பாத்திரங்களும் அவைகளை அப்படி அப்படியே வைத்துப் படிப்பதில் திறமை காட்டி வருகிறார்கள். இதைக்காணும் போது கலைக்கழகங்களும் கல்வி மான்களும் இசை நாடகப் பகுதிகளிலே கவனம் செலுத்த வேண்டியது எவ்வளவு அவசியம் என்பது புலனாகின்றது என புலவர் மணி பெரியதம்பிபபிள்ளை அவர்கள் 1969இல் குறிப்பிட்டுள்ள நிலைமைகளை நோக்கின் இன்று அவர் அவ்வாறு குறிப்பிட்ட 48 ஆண்டுகளைக் கடந்துவந்திருக்கிறோம். அந்த வகையில் கடந்த 100 ஆண்டுகளுக்கு முன்பே கூத்துக்கலை அழிவை நாடிச் சென்றுவிட்டது. இன்று நம்மிடம் எஞ்சி இருப்பது புலவர்மணி குறிப்பிட்ட எச்ச சொச்சங்களின் எச்சமே. இந்த எச்சங்களை எம்மவர்களில் சிலர் நமதுகலை பாரம்பரியம் மாறாமல் செழிமையுடன் வாழ்வதாகவும், சமூகத்தை மாற்றி அமைப்பதாகவும் எழுதியும் கூறியும் வருகிறார்கள். உண்மையில் அவ்வாறான நிலைமைகளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

காணமுடியாதுள்ளது. இது தவறான கண்ணோட்டம் எமது கலைகளின் எச்சங்களையாவது பேணிப்பாதுகாப்பதற்கும் அதன் உண்மை நிலையைக் கண்டறிவதற்கும் பாட பேத ஆய்வுகள் அவசியம். இருக்கின்ற பிரதிகளை அச்சு வாகனம் ஏற்ற வேண்டும். பல்கலைக்கழக மட்டத்தில் கூத்து தொடர்பான ஆய்வுகள் இடம்பெற்ற போதும் கூத்து எழுத்துரு தொடர்பான ஒப்பியல் ஆய்வுகள் முன்னெடுக்கப்படவில்லை. இந்தக் குறையை அறிஞர் பெருமக்கள் கருத்தில் கொள்ள வேண்டும். எனவே புலவர்மணி காட்டிய வழியில் இருக்கின்ற கூத்தாட்டத்தையும், உணர்வையும் இரசிக்கின்ற நாம் கூத்தின் இலக்கியப் பண்பையும், அதன் காவியச் சிறப்பையும் அதன் பாடல் யாப்பு முறையையும் கற்றுச் சுவைக்க வேண்டும். இருக்கின்ற கூத்துக்கலை எச்சங்களை உல்லாசப் பயணத்துறையுடன் இணைத்தல் மூலம் அதனைக் கற்பவர் தொழில்முறைக் கலையாக மாற்றிக் கொள்ள முடியும். அதற்கான வாய்ப்புக்களும் வசதிகளும் எமது பிரதேசத்தில் நிறையவே உண்டு எனலாம்.

மட்டக்களப்பு நாகரீகம் என்பது, "கன்னக்கொண்டைதான். எனக்கும் கன்னக் கொண்டை என்பொன்ற இளைஞர்கள் எல்லாருக்கும் கன்னக் கொண்டையே. இப்போது கொண்டையும் இல்லை குடும்பியும் இல்லை. எங்கும் விரிசிகைதான்", என எழுபதுகளின் மாற்றத்தை புலவர் மணி குறிப்பிடுகிறார். இந்த மாற்றங்கள் நிகழ்ந்து நான்கு தசாப்தங்களுக்கு மேலாகிவிட்டது.

மேலும் நமது பிள்ளைகளுக்கான இயக்கம் பற்றி புலவர்மணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பின்வருமாறு கூறுகிறார். 1914 காலப்பகுதியில் சுவாமி விவேகானந்தரின் அமேரிக்க சிசியையான சகோதரி அவபாமியா அம்மையார் மட்டக்களப்புக்கு விஜயம் செய்து கிராமங்கள் தோறும். இந்து மதப்பிரசாரங்கள் செய்தமையால் நாடெங்கிலும் ஒரு எழுச்சி உண்டாயிற்று இந்த எழுச்சியின் பயனாக "எமது பிள்ளைகள் இருக்க வேண்டிய இடத்தில் இருக்க வேண்டும்" என்பதுதான் இயக்கத்தின் நோக்கமாகும். சைவப்பிள்ளைகள் எல்லோரும் சைவப்பள்ளிக்கூடங்களிலே படிக்க வேண்டும். தேவையான அளவு பள்ளிக்கூடங்களை ஊரெங்கும் நாமே கட்டுவோம். இளைஞர்களும் முதியவர்களும் இப் பணியைத் தொடர்கிறார்கள். விடுமுறை காலங்களிலே இடையிடையே கலந்து கொண்ட நான் இப்போது முழு நேரத் தொண்டனாகிவிட்டேன். எங்கள் நொக்கம் நல்ல நோக்கம். இதுவரை எமது காரியங்களை நமக்காகப்பிறர் செய்த போதும் இனி நமது அலுவல்களை நாமே பார்ப்போம் என்பது தான் எனது குறிக்கோள். இதனைப்பிழையாக விளங்கக் கொண்ட சிலர் எங்கள் இயக்கம் கிறிஸ்தவர்களுக்கு எதிரானது, மிஷனரி மாருக்குத் துரோகம் பண்ணுவது என வீண் பழிக்கு உள்ளாக்கியிருந்தனர். இந்த இயக்கத்தினால் நாடெங்கிலும் சைவ மணம் கமழ்ந்தது. மட்டக்களப்புக்கும் யாழ்ப்பாணத்துக்குமான உறவு மேலும் இரண்டறக்கலந்தது. "நமது பிள்ளைகள் இருக்க வேண்டிய இடத்தில் இருக்க வேண்டும் என்று கோசம் எழுப்பிய எங்கள் கா.வ.மார்க்கண்டன், குருநாதப்பிள்ளை. கனக சபை, கந்தப்பர், முத்தையா ஜே.பி.வித்துவான் ச.பூபாலப்பிள்ளை ,பண்டிதர் சாமிதாசர், மயில்வாகனனார், வித்துவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அ.சரவணமுத்தன், தேசிகமணி அருணாசலம், வித்துவான் கோ.வைத்தியலிங்க தேசிகர், போ.ஆறுமுக சாமி போன்ற பெரியார்கள் வழிப்படுத்தினர். மேலும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அருளம்பல சாமியார், வட்டுக்கோட்டை க.வைத்திலிங்கம், வண்ணார்பண்ணை தம்பி பஞ்சாட்சரம், தெல்லிப்பளை பொ.அம்பலவாணர், மல்லாகம் மாணிக்கம், சுழிபுரம் ஐக்கிய செல்லப்பா, களுவாஞ்சிக்குடி பொன்னம்பலச் சக்கடத்தார் என்போரும் இன்னும் பலரும் இதற்கு ஆதரவாகச் செயற்பட்டனர்.

இந்த இயக்கம், ஞர்யிறு விடுமுறை நாட்களில் செயற்பட்டதாகவும், இதில் உயர் அரச அதிகாரிகளும் பங்கு கொண்டதாகவும் தகவல்களை புலவர் மணி தந்துள்ளார்.

இந்த இயக்கம் ஞாயிறு விடுமுறை நாட்களில் செயற்பட்டதாகவும் இதில் உயர் அரச அதிகாரிகளும் பங்கு கொண்டதாகத் தகவல்களை புலவர்மணி தந்துள்ளார்.

புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை அவர்கள் யாழ்ப்பாணத்துச் சமூகத்துடன் கொண்டிருந்த தொடர்பும் அந்த மக்களுடன் பழகிய முறைமையும் அதனால் அவர் எதிர் நோக்கிய சவால்களும் பற்றிய விடயங்களையும் தீண்டாமையை எதிர்த்ததால் அவர் வாழ்க்கையில் ஏற்பட்ட திருப்பம் என்ற தலைப்பிலே குறிப்பிட்டுள்ளார். சாதியமும் அதற்கெதிரான போராட்டமும் யாழ்ப்பாணத்துச் சமூக மனோநிலையும் அவர் குறிப்புகளில் உள்ளவாறே சுட்டலாம் எனக் கருதுகின்றேன்.

யாழ்ப்பாணத்தில் தாழ்த்தப்பட்ட குலத்தில் பிறந்து தன் முயற்சியால் உயர்வடைந்த பெரியார் ஆறுமுகம் நாதசுரம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வீணை, வயலின் போன்ற இசைக்கருவிகளை வாசிக்க வல்லவர். சைவ சித்தாந்த சாத்திரப் பயிற்சியும் உடையவர். இவரது மகன் பெயர் அப்பாத்துரை இவரும் இத்தகைய தேர்ச்சிமிக்கவர். இதனால் வரும் ஊதியத்தைக் கொண்டு வாழ்க்கையை வளப்படுத்தியவர்கள்.

இந்தவகையில் ஆறுமுகப் பெரியார் புலவர்மணி பற்றி ஏதோ அறிந்து கொண்டு இந்து வாலிப சங்கத்திற்கு அடிக்கடி வருவார். அவரை சந்திக்கும் போதெல்லாம் புலவர்மணி அவர்கள் எழுந்து நின்று வணக்கம் செலுத்துவதும், வரவேற்பதுடன் ஆசனமளித்து உபசரித்து உரையாடி மகிழ்ந்து அவரை வழியனுப்பி வைப்பதும் வழக்கம். யாழ்ப்பாணச் சமூதாயத்தைப் பொறுத்தமட்டில் தாழ்ந்த சாதிக்காரர் ஒருவருக்கு இவ்வாறு கௌரவமளிப்பது என்பது பெருங்குற்றமாகும். இது பற்றி புலவர்மணி குறிப்பிடுகையில் "காரியதரிசி சிவகுரு முதலியார் இந்து வாலிப சங்கத்திற்கு வந்துகொண்டிருந்தார் அவர் முகம்சரியில்லை. அவர் என்னைப் பார்த்து "நீங்கள் இங்கே பள்ளர் பறையருக்கெல்லாம் கதிரை கொடுத்துவிடுவீர்கள் போல் தெரிகிறது. உமது புரட்சிக்கு இது இடமல்ல இனிமேல் இந்த வழக்கத்தை வைத்துக்கொள்ள வேண்டாம் என்று கடித்து கொண்டார். இப்படிச் சொன்னது எனக்குப் பிடிக்கவில்லை நான் சமத்துவவாதி வாய் வேதாந்தம் பேசும் பேர்வழியல்ல, நான் முதலியாரைப் பார்த்து நமக்குள்ளே ஒழுக்கங்கெட்டு பள்ளராய் வாழ்கிறார்கள் என்பதை நாம் பார்ப்பதில்லை. அவர்களை திருத்த நினைப்பதில்லை பள்ளர் குலத்தில் பிறந்து ஒழுக்கத்தில் உயர் குலமான நல்லோரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அவமதிக்கும் பழக்கம் பற்றி நாம் பெருமைப்படுகின்றோம். இந்த வீண் பெருமை நம்மைவிட்டு ஒழிய வேண்டும். இவ்வாறு அழுத்தமாகக் கூறினேன் முதலியார் மறுகனம் பேசாது வெளியேறிவிட்டார். எனக்கூறுவது ஈண்டு நோக்கத்தக்கது.

அதனால் ஆறுமுகம் இருந்தபோது அவர் மகன் கேட்டுக் கொண்டதற்கு இணங்க 10 வெண்பாக்கள் பாடிக் கொடுத்தேன். அதில் ஒரு வெண்பா தனது வாழ்வில் புயலடிக்கக் காரணமாயிற்று என புலவர்மணி கூறுகிறார்.

அப்பாடலை இங்கு குறிப்பிடலாம் என நினைக்கின்றேன்.

"ஒழுக்கத்து உயர் குலமாம் ஓங்குபுகழுண்டாம்
இழுக்கத்து இழிகுலமாம் என்றே – விழுப்பத்து
நூற் குலத்தை எல்லாம் நுணுகியறிந்த
ஆறுமுகன்
மேற்குலத்தன் ஆனான் விரைந்து"

இப்பாட்டுக்கள் வெளிவந்தவுடன் முதலியாரும் இந்து வாலிப சங்க உறுப்பினரும் இந்து வாலிப சங்கத்தில் இருந்து புலவரை வெளியேற்றிவிட்டனர்.

இந்த நிலைமைகள் அன்றைய யாழ்ப்பாணத்து சமூகச் சூழ்நிலையை அப்பட்டமாக வெளிக்காட்டி நின்றது. சாதி ஒடுக்குமுறையின் கொடூரமான சாதிக்குள் சாதி பார்க்கும் போக்கும், பிரதே குறிச்சிச் சண்டைகளும் வாதங்களும் ஆண்டான் அடிமை இருப்புக்களின் எச்சசொச்சமாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பின்தொடரப்பட்ட நிலமது. அந்த வாழ்வியலோடு மட்டக்களப்பு சமூக வாழ்வியலை ஒப்பிடமுடியாது. மட்டக்களப்பில் இந்தளவிற்கு சமூக ஏற்றத்தாழ்வுகள் கிடையாது. மட்டக்களப்பின் இந்தச் சமூக வாழ்க்கை நிலை தென்னகத் தமிழ் மக்களும் தெரிந்து கொண்ட ஒரு செய்தியாகும்.

இந்த உலகிலே மக்கள் பலர் ஏன் ஒடுக்கப்படும் கொள்கையுடன் ஒடுக்கப்பட்டு வாழ்கிறார்கள் என்பது பற்றிய கவலைதான் புலவர்மணிக்கு இருந்தது. சம சந்தர்ப்பம், சமத்துவம், சமரசம் என்னும் மூன்று மொழிகளும் புலவர்மணியினது ஜீவ மந்திரங்கள் ஆகிவிட்டன. ஒரு சமத்துவ சமுதாயத்தை காணும் ஆசை, அதில் தான் ஒரு அங்கமாயிருக்கும் 'நான்' என்ற சிந்தனையும் கனவுகளும் நிறைந்தவராகவே புலவர்மணி அவர்கள் திகழ்ந்தார்கள்.

இதன் காரணமாகவே தமிழ் சமுதாயத்தில் நிலவிவரும் சாதிப்பாகுபாடுகளையும் தாழ்த்தப்பட்டோர் மிருகங்களை விட மோசமாகக் கணிக்கப்படுவதையும் கண்ட புலவர்மணி நொந்த சிந்தனையினரானார். பசுவுக்குப் பூச்சூடி, பொட்டிட்டு, பொங்கல் செய்யும் தமிழினம் தன்னைப் போலொத்த உருவமும், தசையும், இரத்தமும் கொண்ட மனிதர்களை தாழ்த்தப்பட்டவர் என்று தள்ளி வைத்து ஒதுக்குவதைக் கண்டு அவரின் இதயம் அழுதது. மலம் உண்ணும் குணமுடைய வளர்ப்பு நாய் கூட வீட்டிற்குள் நுழையும் அருகதையுடன் இருப்பதையும் அப்படிப்பட்ட வீடுகளில் தீண்டத்தகாதோர் வேலிப்புறத்தே கைகட்டி வாய்பொத்தி நிற்பதையும் ஒப்பிட்டுப் பார்த்த புலவர்மணி பண்புள்ளம் பதறிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மனித சமூகத்தில் மாத்திரமல்ல இறைவனின் சந்நிதியிற் கூட அவர்கள் புகத் தடைசெய்யப்பட்டுள்ள அவலநிலை கண்ட அவர் நாயன்மார், ஆழ்வார்களின் வரலாறுகள் கூட இம்மக்களின் வாழ்க்கையில் ஏதும் மாற்றத்தை ஏற்படுத்தவில்லையே என்று கலங்கினார். பல அறிஞர்கள், பெரியார்கள், சமயக் குரவர்கள் என்போருடன் கலந்துரையாடினார். அதன் பேறாக அவர் கண்டது தீண்டாமை ஒரு தகர்த்தெறிய முடியாத நோய் என்பதுதான். இதை எப்படியும் உடைத்தெறிய வேண்டும் என உறுதி பூண்ட புலவர்மணி அவர்களுக்கு யாழ்ப்பாணத்திலே ஞான கலாநிதி ஐசாக் தம்பையா, எட்வட் மேதா இருவரது தொடர்பும் தற்செயலாகக் கிடைத்தது. இதன் விளைவாக சாவகச்சேரி ஜே.கே. சின்னத்தம்பி போதகரின் தொடர்பு ஏற்படுகிறது.

இதன் காரணமாக இங்கே எங்கள் மத்தியில் எல்லாரும் சமம். பள்ளரும் இல்லை. பறையரும் இல்லை, சமத்துவ சமுதாயமாக நாங்கள் வாழ்கின்றோம். எங்களோடு சேர்ந்தால் உங்கள் எண்ணம் நிறைவேறும். நீங்கள் எங்கள் சகோதரர் என்ற போதகரின் வார்த்தைகளால் கவரப்பட்ட புலவர்மணி கிறிஸ்தவ சமயத்தைத் தழுவிக் கொண்டார்.

இதன் காரணமாக புலவர்மணிக்கு சாவகச்சேரி ட்றிபேக் கல்லூரியில் தமிழ் பண்டிதர் வேலை கிடைத்தது. இந்துக் கல்லூரியில் ஆசிரியராக கடமை புரிந்ததை கைவிட்டு பண்டிதர் வேலையை ஏற்றுக்கொண்டார். இந்த எதிர்பாராத சம்பவம் யாழ்ப்பாணம் முழுவதும் பரவி மட்டக்களப்பிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்திவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கிறிஸ்தவர் மத்தியிலே இங்குமொரு தர்மசேனர் கிறிஸ்தவ வேதாகமத்தைக் கரைத்துக் குடித்து ஏப்பமிடத் தொடங்கிவிட்டார். புதுப்புதுக் கருத்துக்களை வெளியிட்டார். எல்லாத் தேவாலயங்களிலும் இருந்து அழைப்பின் மேல் அழைப்புக்கள் வரத்தொடங்கிவிட்டன. அங்கெல்லாம் சென்று பிரசங்கத்தின் மேல் பிரசங்கம் வைத்து கிறிஸ்தவ போதனைகளைத் தனது கொள்கை நோக்கி முன்னெடுத்தார். கிறிஸ்தவர்களோ புலவரை குருபீடத்தில் ஏறி நின்று பேசுவதற்கு மாத்திரம் அனுமதிக்கவில்லை. இந்நிலமைகளில் 1923 இல் புலவர்மணி அவர்களை மதுரைக்கும் திருப்பரங்குன்றத்திற்கும் இடையில் உள்ள நகரமான பசுமலையில் உள்ள வேத சாஸ்திர கலாசாலைக்கு இரண்டு ஆண்டு கற்கைக்காக கிறிஸ்தவப் பாதிரிமார்கள் அனுப்பி வைத்தார்கள். புதிய சூழ்நிலையில் கிறிஸ்தவர்களின் மத்தியில் வேதசாஸ்திர கலாசாலை விடுதி மேற்பார்வையாளராகவும், பொருளாளராகவும் சேவை செய்து வந்தார். இந்தவகையில் இங்கு தான் கடமையாற்றும் இடத்தின் சூழ்நிலையை புலவர்மணி அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "இங்கு தாழ்த்தப்பட்ட வகுப்புக்களில் பிறந்தோரே அதிகம் இவர்களிடம் தாழ்வு மனப்பான்மை இல்லை உயர்குலத்திற் பிறந்தவர்களை அலட்சியப் புத்தியுடன் அணுகும் பழக்கம் அவர்கள் மத்தியில் இடம்பெற்றிருந்தது. இவர்களை இழிவாக மதிக்கும் பழைய புத்தியுடன் உயர்குலத்திற் பிறந்த மாணவர்கள் நடந்துகொள்வதையும் நான் அவதானித்துக் கொண்டேன். கிறிஸ்தவ சகோதரத்துவம் இவர்களுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பெரும்பாலானோரிடத்தில் பெயரளவில் மாத்திரமே இருந்தது. சில போதகர்களிடமும் இந்தப்போக்கு இடம்பெற்றுள்ளதையும் நான் கண்டுகொண்டேன்.

ஒருநாள் யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு கடிதம் வந்தது. உடைத்து பார்த்ததும் என்னுள்ளம் உடைந்துவிட்டது. இங்கிருந்து தேவதாசன் என்று ஒரு இளைஞர் வருகிறார். இவர் பள்ளர் வகுப்பைச் சேர்ந்தவர் எல்லா வகையிலும் இவரை ஒதுக்கி நடந்து கொள்ள வேண்டும்'' என அதில் கண்டிருந்தது இதுபோல் பல கடிதங்கள் வந்ததாக குறிப்பிட்டு இதை தான் எப்படிப் பொறுப்பேன் என கேட்பதும் புலவரது உள்ளத் தூய்மையையும் நேர்மையையும் அதற்குள் அடங்கியுள்ள போராட்ட குணத்தையும் எடுத்துக் காட்டுகின்றது. தனது கிறிஸ்தவ சமய மதமாற்றத்தால் கூட ஏதும் பயன் விளையாமல் போய்விடுமோ என்று அச்சப்பட்டார். கிறிஸ்தவ சமய மதத்தில் கூட தீண்டாமை பல்வேறு வடிவங்களில் உலா வருவதைக் கண்ட புவர்மணி இதனைச் சமயத்தால் சரிப்படுத்த முடியாது என்பதை உணர்ந்தார்.

வெள்ளையர், கறுப்பர் - காற்சட்டை அணிந்தவர், வேட்டி உடுத்தவர் என்ற பாகுபாடு கிறிஸ்தவ சபையில் ஆதிக்கம் செலுத்துவதையும், ஆங்கில மொழி மூலம் அதிகாரம் செலுத்துவதையும் கண்டார். தீண்டாமை யாழ்ப்பாணத்தில் மாத்திரம் அல்ல பசுமலை வேத சாஸ்திரக் கல்லூரியிற் கூட உணவருந்தும் பாத்திரங்களில் கூட தீண்டாமை நிழலிடுவதைக் கண்டு கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தன் சமூகத் தொண்டாற்றும் முனைப்புக்கு ஏற்ற தீனி கிடையாமல் தனது புதுமதத்தின் மூலங்கூட தீண்டாமைக்கு மருந்து காணமுடியாது என்பதை உணர்ந்தார்.

இவ்வேளையில் தமிழ்ப் பண்டிதரான சுப்பிரமணிய சர்மா என்பவர் மூலம் தனது உறவினரும் இலங்கை மட்டக்களப்பு காரைதீவைச் சேர்ந்தவருமான சுவாமி விபுலானந்த அடிகளாரின் சொற்பொழிவை கேட்டறிந்தார். அதன் ஆர்வத்தால் தூண்டப்பட்டு மதுரைச் சங்க பிரமுகர்கள் தங்கியிருக்கும் சத்திரத்திற்குபுலவர்மணி அவர்கள் வந்து அடிகளாரை கண்டார்.

யாழ்ப்பாணத்தில் பெற்ற நெருக்கமான உறவு மீண்டும் தளிர்த்தது. அவரின் நல்லுபதேசங்கள் தமிழ் பற்றிய உரையாடல்கள் என்பவற்றால் புலவர்மணி அவர்கள் ஒரு புதுத்தெளிவு பெற்றார்.

தொண்டு செய்யவும் தீமையை ஒதுக்கவும் எந்தநிலையில் இருந்தும்கூட பணியாற்றலாம் என்பதை உணர்ந்து கொண்ட அவர் கிறிஸ்தவப் போதகராக இருந்து சமூகப்பணி செய்வதிலும் பார்க்க சாதாரண மனிதனாக இருந்து அதிக விடயங்களைச் சாதிக்கலாம் என்னும் முடிவை எடுத்தார்.

அந்த முடிவுகளை எடுப்பதற்கு எந்தமொழி அடிமைப்படுத்துகின்ற மொழியாக இருந்ததோ, எந்த மொழியை வெறுத்தாரோ அந்த மொழியில் உயர்தரச் சித்தி போதகர் பரீட்சைக்கு முக்கியமாக இருந்தது. இந்தத் தாக்கத்தினால் ஏற்பட்ட திருப்பம் கிறிஸ்தவ திருச்சபைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கட்டுப்பாட்டில் இருந்து விலகிக் கொள்ள அவருக்கு இலகுவாக இருந்தது.

இத்தகைய சூழலிலேதான் காந்தியடிகளின் இயக்கத்தில் பங்குகொள்ளும் சந்தர்ப்பம் சோமசுந்தர பாரதியின் சேர்க்கையால் கிடைத்ததாகக் குறிப்பிடுகிறார். சீ.ஆர்.தாஸ் என்னும் வங்காளத்துச் சிங்கம் சித்தரஞ்சனதாசர் தமது உடைகளைக் களைந்து கதர் அணிந்த சம்பவம் தன்னில் மேலும் மனமாற்றத்தை ஏற்படுத்தியதாகவும் தன்னிடத்தில் தேசிய உணர்வு வித்திடுவதற்குக் களம் அமைத்ததாகவும் கூறுகின்றார்.

பண்டிதர் நா.சுப்பிரமணிய சர்மா மூலம் விபுலானந்த அடிகளாரின் தொடர்பு மீண்டும் கிடைத்ததும் அதன் மூலம் 1926இல் இலங்கை வந்து மட்டக்களப்பில் தனது பணிகளை புலவர்மணி முன்னெடுத்தார். சமுதாயத்திலுள்ள சாதி வேறுபாடுகளை வெறுத்த புலவர்மணிக்கு இங்கு பணியாற்றும் போது மகாத்மாகாந்தியடிகளின் கொள்கைகளைப் பின்பற்றுபவர் ஆனார். இதேயாண்டு காந்தியடிகள் இலங்கைக்கு வருகை தந்தபோது அவரைச் சந்தித்து வரவேற்பு உபசாரப்பத்திரம் வாசித்தளிக்கும் பொறுப்பேற்றார்.

புலவர்மணி தனது சமூகப்பணி மூலம் தமிழ்ப் பணி செய்தார் மட்டக்களப்புப் பிரதேசத்தில் மாத்திரமல்ல இலங்கைத்தீவு முழுவதும் எந்தச் சமூக முன்னேற்ற முயற்சிகள் இயக்கங்கள் ஆரம்பித்தாலும் அவற்றிலே அவரது அங்கத்துவம் இல்லாதிராது. கல்வி, சுகாதாரம், கிராம, சமூக முன்னேற்றம், சமூகத் தாழ்வுப்பாகுபாடுகள், பொது நிலையங்கள் என்பவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சம்பந்தமான எல்லா இயக்கங்களிலும் இவரது நல் ஆலோசனைகளுக்காக அதனை ஆரம்பிப்பவர்கள் அவ் இயக்கங்களின் முக்கிய உறுப்புரிமையை புலவர்மணிக்கு வழங்கி உள்ளமை அவரது செயற்பாட்டின் நேர்மைத் தன்மைக்குச் சான்று.

இவ்வாறான இயக்கங்களின் மூலமாக தமது ஆலோசனைகள், கட்டுரை, கவிதை, சொற்பெருக்கடு உருவத்தில் தமிழ் பணியாய் வியாபித்திருப்பதை அவதானிக்கலாம். சமூகப்பணி விழா வெளியீடுகள் எதுவாக இருந்தாலும் அவ்வெளியீடுகளில், ஆசியுரைகளில், கட்டுரைகளில், முன்னுரைகளில், கவிதைகளில் புலவர்மணியின் சிந்தனைகளும் அதன் வெளிப்பாடுகளும் வடிவம் பெற்றிருக்கும்.

இந்தப் பின்புலத்தில் அரசியற் தலைவர்கள் இவரைத் தமது வலைக்குள் வீழ்த்த பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்த வரலாறுகள் உண்டு ஏனெனில் வாக்காளர்களின் மனநிலை அறிந்து நகைச்சுவையும் தமிழ்ச் சுவையும் கலந்து அரசியற் பேச்சுக்களைப் பேசத் தக்கவர் புலவர்மணி அவர்கள்

1938 ஆம் ஆண்டில் ஈழகேசரி ஆண்டு மலரில் “ஈழமணித் திருநாடெங்கள் நாடே” என்ற பாடல் மூலம் தேசிய இன ஒற்றுமையை வலியுறுத்தினார். அக்காலகட்டம் சுதேச போராட்ட காலமாகும். ஆங்கிலேயருக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டு கலாநிதி என்.எம்.பெரேரா போன்ற தேசிய போராட்டத் தலைவர்கள் சிறைப்பட்ட காலமாகும். ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராகப் பேசுவது எழுதுவது இராஜ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

துரோகமாக இருந்த காலத்திலேயே புலவர்மணி அவர்கள் அஞ்சாமல் தனது கருத்துக்களை முன்வைத்தார்.

"இந்த அடிமைத்தனையகன்றால் இன்பவீடே" என வீர முழக்கமிட்டு "ஈழமணித்திரு நாடு எனும் எனும் பாட்டினை இயற்றி வெளியிட்டார். தமிழ் நாட்டில் பாரதிக்கு நிகராக ஈழத்தில் புலவர்மணி ஒரு தேச பக்தராக தேசிய கவியாக திகழ்ந்தார்.

தேசவழமைச் சட்டத்தில் மட்டக்களப்பு மக்களின் பாரம்பரியமும் அதன் நடைமுறைகளும் பற்றிய இவரது நீதிமன்றச் சாட்சியங்களைத் தொகுத்து நோக்கின் அது ஒரு பெருந் தொகுதி மட்டுமல்ல அது ஒரு பெரும் இலக்கியம் - பண்பு - நீதி சமுதாய முறை கலந்த பொக்கிஷமாகும்.

அரசியற் துறையில் 1935 இல் திரு.எஸ்.ஓ.கனகரெத்தினம் என்பவரோடு கொண்ட தொடர்பு மட்டக்களப்பு சமுதாயத்தின் அரசியற் சமூக மறுமலர்ச்சி நோக்கிய பாதைக்கு வழிவகுத்தது. இதன் காரணமாக இவரது வாழ்க்கையில் அரசியற் பணியும் ஓர் அம்சமாயிற்று.

இதன் பின்னர் அரசியலில் ஓர் மறைமுகமான ஆனால் பயன்தரத்தக்க அரசியற் தொடர்புடைய ஆலோசகராக மட்டக்களப்பு மாவட்டத்தின் வழிகாட்டியாகத் துலங்கினார். இதற்குத் தகுந்த சான்றாக ஈழத்துப்பூராடனார் எனத்தடம் பதித்த அமரர் கலாநிதி. த. செல்வராககோபால் எழுதிய எஸ்.யூ.எதிர்மன்னசிங்கம் முதலாம் பாதத்தில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் பட்டிருப்புத் தொகுதியின் அரசியலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

புலவர்மணியின் முக்கியமான வகிபாகத்தை புரிந்துகொள்ளல் பெரும் உதவியாக உள்ளது எனலாம்.

இந்த வகையில் கிழக்கு மாகாணத்தில் கூட்டுறவு இயக்கம் உருவாக எவ்வளவு தூரம் இவர் உழைத்துள்ளார் என்பதும் கூட்டுறவு சம்மேளனத்தில் பல முக்கியமான பதவிகளை வகித்து மட்டக்களப்பு மக்களின் வாழ்வியலில் கூட்டுறவு இயக்கம் நிலை நிறுத்தப்பட அரும்பணியாற்றினார்.

புலவர்மணி தனது வாழ்நாள் முழுவதும் தேசிய ஒற்றுமை எனும் அடிப்படையில் தனது அரசியற் கொள்ளைகளை வகுத்துச் செயற்பட்டார். ஆயினும் 1972 ற்குப் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி உருவானதன் பின்னர். தனது கொள்கையை அதற்கேற்ப அமைத்துக்கொண்டு செயற்பட்டார். ஆயினும் தமிழ் காங்கிரஸ் ஆரம்ப உறுப்பினராக இருந்து இறுதிவரை அமரர்.ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்களுடன் இணைந்து செயற்பட்டார்.

இத்தகைய அரும்பணிகள் புரிந்த புலவர்மணி அவர்கள் தமது பேரன் திலிபனுடன் உரையாடிக்கொண்டிருந்த வேளை 1978 கார்த்திகை மாதம் 2ஆம் திகதி காலை இயற்கை எய்தினார். அவர் இயற்கை எய்தி 39 ஆண்டுகள் கடந்து 40ஆம் ஆண்டிலே காலடி எடுத்து வைத்துள்ளோம். இந்த 40 ஆண்டு காலத்திலே மட்டக்கப்பில் நாம் இழந்தவை ஏராளம். 3 தசாப்தங்களுக்கு மேலாக தமிழ் முஸ்லிம் உறவு தொடர்பாக புலவர்மணி அவர்கள் பின்வருமாறு கூறுகிறார். “தமிழர் - முஸ்லிம்கள் ஆகிய நாம் மட்டக்களப்பு அன்னையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இருதயத்தின் இரண்டு இதழ்களையும் போன்றவர்கள். இரண்டு இதழ்களும் ஒத்து இயங்கினால் தான் இதயத் துடிப்பு நிலைபெறும். ஒத்து இயங்காவிட்டால் துடிப்பு நின்று போகும். அன்னையின் உயிர் வாழ்விற்கு இந்து முஸ்லிம் ஆகிய நமது ஒற்றுமை அவசியம் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும் பிரிவினைச் சக்திகளுக்கு இடம் கொடுத்து அழிவுப் பாதையிலே செல்லாமல் நம்மை நாம் பாதுகாத்துக் கொள்வோமாக"

இதன் மூலம் கிழக்கின் இன ஒற்றுமை வலியுறுத்தப்பட்டுள்ளது. அதற்கான முறையான திட்டங்கள் தொடர்ச்சியாக பேண முன்னெடுக்கப்பட்டதா என்ற வினா இன்றைய நிலைமைகளில் எம்முன் நிற்கின்றன.

மேலும் அரசியலில் இந்திய உறவு நிலை தொடர்பாக புலவர்மணி பின்வருமாறு கூறுகின்றார். நமது நிலை,பண்பாடு, முதலிய எல்லாவற்றிற்கும் தாயகம் இந்தியாவே என்பது உலகத்திற்கு உண்மை. உலகம் முழுவதற்கும் அறிவொளியூட்டிய தகைமை இந்தியாவிற்கு உண்டு. இங்ஙணமிருக்க இன்னும் எல்லாம் மேற்கிலிருந்துதான் இறக்குமதியாக வேண்டும் என எண்ணுகின்ற சிலர் நம்மிடையே இருக்கின்றார்கள். ஏகாதிபத்தியம் போய்விட்டது ஆனால் அதன் வாசனை போகவில்லை இந்த வாசனையும் நீங்க வேண்டும் என வலியுறுத்தினார்.

புலவர்மணியினது பூலோக ரீதியான இராஜதந்திர ரீதியான சிந்தனை இக்கூற்றில் அழுத்தமாக ஆழமாக புதைந்து கிடப்பதை மறுக்கமுடியாது அதுதீர்க்க தரிசனமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தமிழரது உரிமை போராட்டம் தொடர்பான வளர்ச்சி அழிப்பு இரண்டினதும் ஈழத்தமிழரின் இந்திய அணுகுமுறையே நல்ல பாடத்தை இன்றும் கூட கற்பித்துக் கொடக்கின்றது. எனவே புலவர் காட்டிய வழியில் நம்மவர்களுக்கு சிந்தனை மாற்றம் அவசியம் எனலாம்.

நீடித்த தமிழ் மக்களது உரிமைக்கான ஆயுதப் போராட்டம் அதனைத் தொடர்ந்து அரசியலில் மீட்சிக்காக உருவாக்ப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என அரசியல் நிலைகளில் பல்வேறு தாக்கங்களை அடைந்திருக்கின்றோம்.ஆயினும் புலவர் மணி காட்டிய வழியில் நாம் எவற்றைச் சந்திருக்கின்றோம் என்பது எம்மிடம் உள்ள பெரும் வினா?

மாறிவரும் சமூக ஒழுங்கில் கற்ற சமூகம், அரசியல் வாதிகள் இனப்பிரச்சினை ரீதியாக தம்சுயநலச்செயற்பாடுகளுக்கு அப்பால் பொதுநல நோக்கில் எவற்றைச் சிந்தித்திருக்கிறது.

ஜி.ஜி.யின் 50ற்கு 50 கோரிக்கை அதன்பின் தனிநாடு கேட்டு கூட்டணியின் அகிம்சைப் போராட்டம் அதன் பின்னரான ஆயுதப் போராட்டம் அது மௌனிக்கப்பட்டதன் பின் மீண்டும் சமஷ்டி அது கைவிடப்பட்டு 20வது திருச்சட்டம் வரை நாம் நகர்ந்திருக்கிறோம். நாம் தமிழர் பலமாக உள்ளோமா பலவீனமாக உள்ளோமா எனச் சிந்திக்க வேண்டிய தருணம் இது

தமிழர் உரிமைப் போராட்டம் காரணமாக புலவர்மணி காலத்து சாதிய வாதம், பிரதேச வாதம் கவிஞர் காசியானந்தன் காலத்தில் தகர்த்தெரியப்பட்டது. ஆயினும் அது இன்று மீண்டும் துளிர்விட்டுள்ளது. தமிழ் முஸ்லிம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உறவுகள் நேர் எதிர் கணியமாக மாறி வருகிறது. இன்று மாகாண நல்லாட்சி நிறைவு பெற்று ஒரு மாதம் கடக்கும் முன்பே மீண்டும் தமிழ் முஸ்லிம் முறுகல் நிலை தோன்றியுள்ளது.

பல்கலைக்கழக தரப்படுத்தல், தொழில்வாய்ப்பு, அபிவிருத்தி, குடியேற்றம், மொழி உரிமை, தொடர்பாக எழுந்த தமிழரது அடிப்படை உரிமைப் போராட்டம் புலவர் காலம் முதல் இன்று வரை பல்வேறு தளங்களைக் கண்டுள்ளது. தமிழ் மக்களது இயல்பு வாழ்க்கையையும், அபிலாசைகளையும் அரசியல் உரிமை தொடர்பான போராட்டத்தையும் எமது அரசியல் வாதிகளும் எமது அரசியற் பிரதிநிதிகளும் எமது புத்திஜீவிகளும் எந்தளவிற்கு வழிப்படுத்தியுள்ளனர். எத்தகைய பங்களிப்பைச் செய்துள்ளனர். என்ற வினாக்களுக்கு நாம் விடை காண வேண்டிய தேவையுள்ளது.

மட்டக்களப்பின் மகத்தான தலைவர் நல்லையா மாஸ்டருக்குப் பின், இராஜன் செல்வநாயகம், தெய்வநாயகம், இராசதுரை, போன்றோர்கள் முன்னெடுத்த சேவைகளுக்கு அப்பால் மட்டக்களப்பு அடைந்த மாற்றங்கள் என்ன?

தமிழ் முஸ்லிம் உறவு நிலை தொடர்பான நிலையான கொள்கை வகுப்பு என்ன?

சாதி ஒடுக்கு முறைக்கு எதிரான புலவர்மணி காலத்து அகிம்சைப் போராட்டமும் அதன் பின்னரான ஆயுதப் போராட்டமும் பெண்கள் வாழ்வில் மறுமலரச்சியை ஏற்படுத்திய போதும் கூட அது இன்று எந்தளவிற்கு பெண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


தொடர்பான பிரச்சினைகளில் செயல்ரீதியில் நிலையான வடிவம் பெற்றுள்ளன.


அரசியல் உரிமை தொடர்பாக தொடர்ச்சியாக எதிர்நோக்கும் சவால்களை முகம்கொள்ள புலவர் காட்டிய வழியைத் தொடர்ந்து நாம் பின்பற்றுகின்ற கொள்கை வகுப்புக்கள் எவை? இவற்றுக்குத் தீர்வு காணவேண்டிய தேவை எமது சமூகநலன் விரும்பிகள், புத்திஜீவிகள், அரசியல் வாதிகள் அனைவருக்கும் முன் உள்ள பணி இவற்றைச் செய்வதே புலவர்மணி அவர்களுக்கு நாம் செய்யும் நன்றிக்கடன் ஆகும்.

நாம் நமது முன்னோர் விட்டுச்சென்ற பாதையை சரியான முறையில் பின்பற்றி நமது இன்றைய தலைவர்கள் நாளைய சந்ததிக்கு எமது கலை, பண்பாடு, பாரம்பரியம், அரசியல் உரிமை, வரலாறு தொடர்பாக எவற்றை கையளிக்கப் போகிறோம் என்பதை வலியுறுத்தி எம்மிடையே புலவர்மணி அவர்களின் பெயரால் இடப்பட்டுள்ள இந்த இடைவெளியை நிரப்பவேண்டியது நாம் அனைவர் முன்னுள்ள கடமையாகும் எனவே பயன் உறுதிமிக்க தீர்மானங்களைப் புலவர்மணியின் பெயரால் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப் பணிமன்றம் அவர் விட்டுச் சென்ற பணியை காலதேச வர்த்தமானங்களைக் கடந்து தமிழர் தம் இருப்பைக் காக்க அணிதிரள சமூக நலனுடன் செயற்பாடுகளை முன்னெடுப்பதே இன்றைய கால மாற்றத்தினதும் சமுதாய மாற்றத்தினதும் மிக முக்கிய கடமையாக உள்ளது. அதனை இம்மன்றம் முன்னெடுப்பது நாம் அவருக்குச் செய்யும் அஞ்சலியாகும் எனக்கூறி எனது இவ் நினைவுப் பேருரையை நிறைவு செய்கின்றேன். - நன்றி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media











Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media









Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media